




# எவ்வளவு புரட்டி போட்டாலும் மீண்டும் எழுந்தார் டிரினிட்டி



4 Feb 2023 05:30

கீமோதெரபி சிகிச்சையின் பக்க விளைவுகளின் காரணங்களால், மூன்று முறை மண்டை ஓட்டில் சிகிச்சைக்குச் சென்ற 19 வயது ஸ்வஸ்தி டிரினிட்டி கோவிந்த ராஜன், தற்போது நம்மை வியப்பில் ஆழ்த்தும் வகையில் சிங்கப்பூர் துப்பாக்கிச் சுடும் சங்கத்தில், துப்பாக்கிச் சுடுதலில் பயிற்சிகளை மேற்கொள்கிறார்.




பத்து ஆண்டுகளுக்கு முன், ஒன்பது வயதில் கொடிய நோய் அவரின் வாழ்க்கையைப் புரட்டி போட்டது. அடிக்கடி சோர்வடைந்துக்கொண்டே இருந்த இவருக்கு, திடீரென ஒரு முறை காய்ச்சலும், மார்பு பக்கம் வீக்கமும் ஏற்பட்டது.

ஆரோக்கியமாகப் பிறந்த குழந்தைக்கு உடலில் வழக்கத்துக்கு மாறான மாற்றம் தென்பட்டதும், பெற்றோர்கள் இருவரும் பதற்றத்தோடு குடும்ப மருந்தகத்திற்கு விரைந்தனர். ரத்தப் பரிசோதனையில், எதிர்பாராதவிதமாக, டிரினிட்டியின் ரத்தத்தில் புற்றுநோய் அணுக்கள் அதிகமாக தென்பட்டன.

கேகே மகளிர், சிறார் மருத்துவமனையில் மேற்கொண்ட ரத்தப் பரிசோதனைகளின் முடிவில், டிரினிட்டிக்கு, 2013ஆம் ஆண்டு, 28 ஜூனில் தீவிர லிம்போசைடிக் லுகேமியா (Acute lymphocytic leukemia) எனும் ரத்த புற்றுநோய் இருப்பது உறுதியானது.




## சமூகம்

12 Feb 2023
அன்புக்கும் பண்புக்கும் அங்கீகாரம்


12 Feb 2023
'வெறிச்சோடிப் போனாலும் தரம் மாறாது'


12 Feb 2023
உருவச்சின்ன வடிவமைப்பு போட்டியில் முதல் பரிசைத் தட்டிச் சென்ற சசிகுமார்


5 Feb 2023
'புது வாழ்வு தொடங்கக் காத்திருக்கிறோம்'


5 Feb 2023
இணைய மோசடிகளுக்கு எதிராகச் செயல்படும் காவல்துறை அதிகாரி


## அதிகம் படித்தவை

1 'சிகிச்சை ஏதும் பெறவில்லை'
2 தடையை நீக்கிய சங்கம்
3 திரைத் துளிகள்
4 விஜய் கதையில் அஜித்
5 'அப்படிச் சொல்லவில்லை'

ஒன்பது வயது டிரினிட்டிக்கு, தன் உடலில் என்ன நடக்கிறது என்று எதுவும் தெரியவில்லை. டிரினிட்டிக்கு ஏற்பட்ட துரதிருஷ்டத்துக்கு, கீமோதெரபி மட்டுமே தீர்வாக இருந்தது. ஒரு வாரத்திற்கு இரண்டிலிருந்து மூன்று முறை கீமோதெரபி சென்றார் டிரினிட்டி.


ADVERTISEMENT





கீமோதெரபிக்குத் தேவைப்படும் மருந்துகள் ஊசி மூலம் தன்னுடைய வலது கையில் இருக்கும் நரம்புகளில் ஏற்றப்பட்டன. வலி தாங்க முடியாத டிரினிட்டி, ஒவ்வொரு முறையும் ஊசி நரம்புக்குள் ஏறிய போது, கதறி அழுததை நினைவுகூர்ந்தார்.

மூன்றாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த டிரினிட்டி, நோய்வாய்ப்பட்ட காரணங்களால் பள்ளிக்குத் திரும்பவில்லை. கீமோதெரபியினால், வாந்தி எடுப்பது, முடி உதிர்வது, கை, கால் நகங்கள் கருநிறமானது ஆகியவை டிரினிட்டிக்கு வழக்கமாகியது.

கீமோதெரபியின் காரணங்களால், டிரினிட்டியின் நோயெதிர்ப்பு சக்தி வெகுவாக குறைந்தது. இதன் காரணமாக அவருடைய மூளையில், பூஞ்சை தொற்று ஏற்பட்டது. பூஞ்சை தொற்றின் காரணமாக டிரினிட்டியின் இடது பெருமூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டது. ரத்தக்கசிவு அவருடைய அசைவுகளைப் பாதித்தது.

மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவால் டிரினிட்டியின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அபாயம் இருந்ததால், அவர் அவசரமாக சிகிச்சைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். சிகிச்சையின் போது, இடது மூளையிலிருந்து ரத்த கட்டிகள் அகற்றப்பட்டன.

முதல் சிகிச்சைப் பலன் அளிக்காததால், டிரினிட்டிக்கு மூன்று முறை மண்டை ஓட்டில் சிகிச்சைகள் நடைபெற்றன. அதன் காரணமாக அவருடைய மண்டை ஓடு அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக மருத்துவர்கள் டைட்டானியம் தட்டை பொருத்தினார்கள். டிரினிட்டிக்கு இப்பொழுது, அந்த டைட்டானியம் தட்டு தான் மண்டை ஓடாக செயல்படுகிறது.

மூன்று முறை மூளை சிகிச்சைக்குச் சென்ற டிரினிட்டி, துவண்டுபோனாலும் மனம் தளராமல் போராடினார். சிகிச்சையினால் டிரினிட்டியின் வலது பக்கம் முழுமையாக செயலிழந்து விட்டது. மேலும், இதற்கு முன்னர் வலது கைப் பழக்கம் கொண்ட டிரினிட்டி, இடது பக்கத்திற்கு மாற வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இளம் வயதில், ஒருவர் தாங்க முடியாத அளவிற்கு அத்தனை யையும் எதிர்நோக்கிய டிரினிட்டிக்கு, அவருடைய பெற்றோரும் இரண்டு மூத்த சகோதரிகளும் தம்பியும் பக்கப் பலமாக இருந்தனர். (படத்தில் தாயார் எஸ்தருடன் டிரினிட்டி)

“இந்த உலகில் நமக்கு எந்த பிரச்சனை வந்தாலும், துவண்டுவிடக்கூடாது. என்னை போல சிறுவர்கள் புற்றுநோயால் பாதிப்படைந்திருப்பார்கள். நான் இவ்வளவு தூரம் போராடியதால், இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். புற்றுநோய் ஒரு கொடிய நோயாக இருந்தாலும், நாம் மன வலிமையோடு மீண்டு வர வேண்டும்,” என்று கூறினார் டிரினிட்டி.


## இதே பகுதியைச் சேர்ந்த மற்ற செய்திகள்


காலம் கடந்தும் சற்றும் குறையாத அன்பு, காதல்


அன்பர் தினத்தில் பெருகும் சமூக உணர்வு


கடல் குப்பைகளை அகற்றுவதில் ஆர்வம்


பண்ப
இளை

## தலையங்கம்

12 Feb 2023
பயங்கரவாத வலையில் சிக்கிவிடாமல் இளையரைக் காப்போம்


5 Feb 2023
வெற்றிகரமான முறையில் மூப்படைய உதவும் 2023 செயல்திட்டம்


29 Jan 2023
இந்த ஆண்டில் பணவீக்கம் நீடிப்பதற்கே வாய்ப்பு


22 Jan 2023
இன்னமும் நிச்சயமில்லாத சூழலில்தான் பொருளியல் நிலவரங்கள்


15 Jan 2023
சீனப் பயணிகளும் சிங்கப்பூரின் விவேகமிக்க அணுகுமுறையும்






# அண்மைய காணொளிகள்




ஸ்ரீ மாரியம்மன் கோவிலின் குடமுழுக்கு விழாவிற்கு சிறப்பு விருகையளித்த அமைச்சர்கள் எஸ் ஈஸ்வரன், ஜோசஃபின் தியோ செய்தியாளர்களிடம் பேசினர்



ஸ்ரீ மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழா 2023 காட்சிகள்!


'கேங்க்ஸ்டா' பாடல் வெற்றி குறித்து ஷபீருடன் நேர்காணல்



சிங்கப்பு
பழமை
கோயில்
கோயில்
பெற்று

## இணையத்திலிருந்து உங்களுக்காக


Suggested Tamil Murasu

இனி 'பிசிஆர்' சான்றிதழ் வேண்டாம்: இந்தியா செல்வோர் நிம்மதிப்


Suggested Tamil Murasu

ரஷ்ய கர்ப்பிணிகள் வருகை அர்ஜென்டினாவுக்கு



Suggested Singtel

[Singtel Exclusive] Get an Epic storage upgrade worth up to $360, with or without plan.

Recommended by Outbrain

தமிழ் முரசு | SPH MEDIA

For advertising please contact:
: (65) 6319 8844, (65) 6319 8611
: mkgsales@sph.com.sg

For overseas or advertorial enquiries please click here.

MCI (P) 078/10/2022. SPH Digital News Copyright © 2023. SPH Media Limited. Co. Regn. No. 202120748H. All Rights Reserved.
ரகசியகாப்புக் கொள்கை | நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் | தரவு பாதுகாப்புக் கொள்கை | கணினி வரிகோப்புக் கொள்கை